**தலைப்பு 256 – கம்பஹா மாவட்ட செயலகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

தலைப்பு 256 – கம்பஹா மாவட்ட செயலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பஹா மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் தொடர்பான பொழிப்பு அறிக்கை 2023 மே 25 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பஹா மாவட்ட செயலகத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 25 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

கம்பஹா மாவட்ட செயலகத்தின் நிதிக் கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கம்பஹா மாவட்ட செயலகத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பஹா மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உபபிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபுர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக்காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல்வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரிள் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் உள்ளகக் கட்டுப்பாட்டிலான முக்கியமான பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டிற்கு நேரொத்ததாக தயாரிக்கப்பட்டன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பின்வரும் சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| முன்னைய ஆண்டிற்கான அறிக்கையின் பந்திக்கான தொடர்பு | அமுல்ப்படுத்தப்படாத சிபாரசிசகள் | இந்த அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
| --- | --- | --- |
| (i) 2.4 ஆம் பந்தி | விசாரணை சபை அறிக்கைக்கு இணங்க அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். ஒரு புதிய விசாரணை சபையை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2.5 (i) |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 5 (இ) பந்தி | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க இடமாற்றத்தை அமுல்ப்படுத்துதல் வேண்டும். | 5 (ஈ) |

**2. நிதி மீளாய்வு**

**2.1 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கிய நிதி எற்பாட்டினைப் பயன்படுத்துதல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசகள் |
|---|---|---|
| மரணமடைந்தமை பற்றி தெரியப்படுத்துவதற்கு தாமதித்தல், ஓய்வூதிய சுற்றறிக்கைக்கு இணங்கிருக்காமை, மற்றும் ஏனைய காரணங்களின் அடிப்படையில் கம்பஹா மாவட்டத்தில் உள்ள 13 செலகங்களின் மூலம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஓய்வூதியத்தினைப் பெற்றுக்கொண்டிருந்த 402 ஓய்வூதியக்காரர்களுக்கு மொத்தமாக ரூபா 38,300,144 தொகை மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | மிகையாகச் செலுத்திய பணத்தில் பெரும்பாலானவை அறவிடப்பட்டுள்ளது என தயவாக தெரிவிக்கிறேன். | * மிகைக்கொடுப்பனவுகள் துரிதமாக மீள அறவிடப்படுதல் வேண்டும்.<br>* பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக தாபன விதிக்கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பாவற்றுடனான இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு** | **பெறுமதி ரூபா** | **இணக்கமின்மை** | | |
| **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை** | | | | |
| VII ஆம் அத்தியாயத்தின் 12.2.3 ஆம் பிரிவு | | நிரந்தர நியமனம் வழங்கப்படும் | தற்பொழுது சேவையில் ஈடுபட்டுள்ள | தாபனவிதிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளின் |

| | | | |
|---|---|---|---|
| | வரை ஒரு தற்காலிக பரிகாரமாகவே பதில் கடமை பார்த்தல் நியமனம் வழங்கப்படலாம் என்ற போதிலும் கம்பஹா மாவட்டத்திலுள்ள 13 பிரதேச செயலகங்களில் 202 கிராம உத்தியோகத்தர்கள் 02 மாதங்களிலிருந்து 09 ஆண்டுகள் வரையான காலம் பதில் கடமை மேற்கொண்டிருந்தனர். | உத்தியோகத்தர்கள் ஓய்வு பெறுதல், மாவட்டத்திற்கு வெளியே இடமாற்றம் பெறுதலின் அடிப்டையில் வெற்றிடம் உருவாகியுள்ளது. 2018 ஆம் ஆண்டின் பின்னர் கிராம உத்தியோகத்தர் பதவிக்கு புதிய ஆட்சேர்ப்பு இடம்பெறாமையின் அடிப்படையில் வெற்றிடங்கள் பூரணப்படுத்தப்படவில்லை. அதனால் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் பதில் கடமை பார்ப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ளனர். | பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.3 மோசடித் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசகள் |
|---|---|---|---|
| (i) | மஹர பிரதேச செயலகத்தில் 2014 யூலை 15 ஆந் திகதி இடம்பெற்ற பணப் பெட்டியிலுள்ள பணம் காணாமல் போனமை சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 104(1)(ஆ) இன் பிரகாரம் நடாத்தப்பட்ட இறுதி விசாரணை அறிக்கையின் பிரகாரம் பிரதேச செயலாளர், கணக்காளர் காசு உதவியாளர், சிறாப்பர் ஆகிய உத்தியோகத்தர்களிடமிருந்து சமமாக ரூபா 270,561 வீதம் அறவீடு செய்ய வேண்டுமென சிபாரிசு செய்யப்பட்டிருந்ததுடன் 2020 செப்தெம்பர் 22 ஆந் திகதி உள்நாட்டு அலுவல்கள் | 2014 யூலை 14 ஆந் திகதி மஹர பிரதேச செயலகத்தில் காசு காணாமல் போனமை சம்பந்தமாக நடாத்தப்பட்ட விசாரணை அறிக்கைகளுக்கு இணங்க பொறுப்புக்கூற வேண்டிய நான்கு உத்தியோகத்தர்களிடமிருந்தும் மத்திய அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் சம்பந்தமாக ரூபா 32,247.14 வீதம் அறவீடு செய்வதற்காக 2021 நவம்பர் 01 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அவர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டிருந்தது. மீண்டும் மேற்கூறிய சம இலக்க மற்றும் 2021 | விசாரணைக் குழு அறிக்கைக்கு இணங்க அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை சம்பந்தமாக பொறப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். புதிய விசாரணைக் குழுவினை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்த |

அமைச்சு செயலாளரின் கடிதத்தில் உரிய அறவீடுகளுக்கு சிபாரிசும் அங்கீகாரமும் வழங்கப்பட்டிருந்தும் பணம் காணாமல் போனமை இடம்பெற்று 8 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் உரிய அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. நட்டப்பணத்தை அறவீடு செய்யும் போது அதற்காக விருப்பமின்மையினைவெளியிடுதல் வழக்கமான தன்மையானதுடன் இதன் போதும் நான்கு உத்தியோகத்தர்களும் விருப்பமின்மையை வெளிப்படுத்தியதன் அடிப்படையில் மேற்கூறிய பணம் காணாமல் போனமை மற்றும் அதற்கு பொறுப்புக் கூற வேண்டிய நபர்களை நிர்ணயித்தல் தொடர்பாக விசாரணை செய்வதற்காக மீண்டும் உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு செயலாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாவட்ட செயலாளரினால் 2022 ஏப்ரல் மாத்தின் போது புதிய விசாரணைக் குழு நியமிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க காசு காணாமல் போனமையால் பாரியளவு நட்டம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்தும் இன்னும் புதிய விசாரணைக்காக வினைத்திறனற்ற வகையில் பணத்தை செலவு செ்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

திசெம்பர் 14 ஆந் திகதிய கடித்தின் மூலம் மேல் மாகாண சபையினால் அறவிட வேண்டிய நட்டத்திற்காக ரூபா 228,946.50 வீதம் செலுத்துமாறு அவர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டது. எனினும் உரிய பொறுப்புக்கூற வேண்டிய அனைத்து உத்தியோகத்தர்களும் நட்டத்தை ஈடுசெய்வதற்கு எந்த இணக்கப்பாட்டிற்கும் வந்திருக்காததனால் உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சு செயலாளரின் F/DA/06/WRI02/003 ஆம் இலக்க 2022 பெப்ரவரி 10 ஆந் திகதிய கடிதத்திற்கு இணங்க ஒரு புதிய கப்புறுதிச் சபையின் மூலம் நி.பி 104(1)(ஆ) இன் பிரகாரம் மீண்டும் விசாரணையை நடாத்துவதற்கு சபை பெயரிடப்பட்டு அங்கீகாரத்திற்காக 2022 மார்ச் 22 ஆந் திகதி உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அமைச்சு செயலாளரினால் புதிய விசாரணைக் குழுவினை நியமிப்பதற்கு வழங்கிய அங்கீகாரத்தின் அடிப்படையில் திலே/P/1/16 ஆம் இலக்க 2022 எப்ரல் 08 ஆந் திகதிய தீர்மானம் புதிய விசாரணைக் குழுவிற்கு தெரியப்படுத்தப்பட்டது. மேலும் 03 மாதங்களுக்குள் அறிக்கையினை வழங்குமாறு தெரிவிக்கப்பட்டது.

உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (ii) | மினுவாங்கொட பிரதேச செயலகத்தில் சேவையாற்றிய ஒரு முகாமைத்துவ உதவியாளர் பொது மக்களின் உதவிப் பணத்தை மோசடி செய்ததன் அடிப்படையில் ரூபா 1,400,429 பணம் அறவீடு செய்யப்பட வேண்டியிருந்ததுடன் இப்பணத்தில் ரூபா 39,480 தொகை 2022 யூலை 28 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தும் மிகுதிப் பணத்தை மிகவும் விரைவாக அறவீடு செய்வதற்கு அல்லது உத்தியோகத்தருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | அந்த உத்தியோகத்தர் 2023-07-23 ஆந் திகதி ஓய்வு பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதனால் அரசாங்கத்தினால் அறவிட வேண்டிய ரூபா 1,430,428 தொகையை உரிய உத்தியோகத்தர் ஓய்வுபெறும் திகதிவரை அவரின் மாதாந்த சம்பளத்தில் 40% பணத்தை அறவீடு செய்வதற்கும் இன்னும் செலுத்துவதற்கு எஞ்சியுள்ள பணத்தை அவரின் பணிக்கொடை பணத்திலிருந்து அறவீடு செய்வதும் பொருத்தமானது என சிபாரிசு செய்யப்பட்டு தேவையான மேலதிக நடவக்கைகளுக்காக அரசாங்க நிருவாக உள்நாட்டு அலுவல்கள் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு ஒரு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | அறவீட்டினை துரிதப்படுத்துதல் வேண்டும். |

## 2.4 முற்பணங்கள் வழங்குதலும் தீர்த்துவைத்தலும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசகள் |
|---|---|---|
| மரணமடைந்த, ஓய்வுபெற்ற, வேலையிருந்து இடைநிறுத்திவைக்கப்பட்ட மற்றும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து இடர்கடன் மற்றும் ஏனைய கடனாக 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் மொத்தம் ரூபா 3,666,806 ஆகும். அந்த நிலுவையாகக் காணப்பட்ட மீதி 01 ஆண்டிலிருந்து 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக காணப்பட்டு வந்திருந்தும் அம்மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் மீதியினை அறவீடு செய்யும் போது நீதிமன்ற நடவடிக்கை முதலியவை இருந்தாலே தவிர ஏனைய உத்தியோகத்தர்களிடமிருந்து முடியுமான அளவில் கடன் மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் குறிப்பிடத்தக்க அளவான மீதி அறவீடு செய்யப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | அறவீடு செய்யக்கூடிய மாற்று நடைமுறைகளின் மூலம் அறவீடு செய்வதற்கு துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 2.5 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மூன்றாந் தரப்பினர்களுக்கு மீண்டும் கொடுப்பனவு செய்வதற்காக தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த பிடித்துவைத்தல் வைப்புக் கணக்கில் 14 சந்தர்ப்பங்களின் போது வைப்புச் செய்யப்பட்ட 02 ஆண்டுகளுக்கு மேல் காலங்கடந்த ரூபா 84,451,384 பெறுமதியான மீதிகள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வைப்பு மீதிகளை 2023 ஆம் ஆண்டிற்குள் முடியுமான அளவில் தீர்த்துவைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்திட்டங்களை பூர்த்திசெய்யாது கைவிடுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | மீரிமக பிரதேச செயலகத்தினால் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்ட 06 உத்தியோகபூர்வ இல்ல அலுவலகங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையும் அத்திவாரம் மாத்திரம் இடப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | 2018 ஆம் ஆண்டில் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்ட இந்த உத்தியோகபூர்வ இல்ல அலுவலகங்களுக்காக வேண்டப்பட்ட நிதி ஏற்பாடு கிடைக்காமையின் அடிப்படையில் பூரணப்படுத்த முடியாதுள்ளது. | உடன்படிக்கை செய்யப்பட்ட காலத்திற்குள் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மினுவாங்கொடை நாலந்தா ஆண்கள் பாடசாலையில் ஒரு குழாய்க் கிணறு நிர்மாணிக்கப்பட்டு நீர்ப்பம்பியினைப் பொருத்தி நீரினைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 800,714 செலவு செய்யப்பட்டதன் பின்னர் செயற்திட்டம் முழுமையாக கைவிடப்பட்டதன் காரணமாக அப்பணம் விளைவற்ற | நீர் மாதிரியினை பரீட்சித்ததன் பின்னர் துரிதமாக குழாய்க் கிணற்றினை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | உடன்படிக்கை செய்த காலத்திற்குள் செயற்திட்டத்தினைப் பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலவாக மாறியிருந்தது. | | |
| (இ) | சௌபாக்கிய உற்பத்திக் கிராமங்கள் செயற்திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டின் போது கம்பஹா பிரதேச செயலகத்தின் மூலம் மாகெவிட பிரதேசத்தில் ரூபா 1,875,525 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட 06 விற்பனை நிலையங்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்குப் பொருத்தமான மட்டத்தில் வேலைகள் முடிவுறுத்தப்படாததனால் செலவு செய்யப்பட்ட பணத்திற்கு இதுவரை பிரதிபலன்கள் கிடைக்க வில்லை. | விற்பனைக் கூடங்களை நிர்மாணிப்பதற்காக 2021.11.15 ஆந் திகதி உடன்படிக்கை செய்யப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. 2021.12.28 ஆந் தகிதி முடிவடைந்துள்ள வேலைகளுக்காக அப்பணம் பயன்படுத்தப்பட்டது. இந்த ஆண்டில் மூலப்பொருட்களின் விலை அதிகரித்தல் மற்றும் மூலப்பொருட்கள் சந்தையில் தட்டுப்பாடு முதலிய காரணங்களால் முழுமையாக பூர்த்திசெய்லவதற்கு முடியாதிருந்தது. வேலைகளை முடிவுறுத்துவதற்கு 2022 ஆம் அண்டின் போது நிதி எற்பாடு கிடைக்கவில்லை. | செயற்திட்டத்தை துரிதமாக பூர்த்திசெய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | கம்ஹா மாவட்டத்தில் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய வறட்சிக் காலங்களில் இன்னல்களுக்கு உள்ளாகும் மக்களுக்கு நீர் வழங்குவதற்காக ரூபா 547,134 செலவு செய்து அகழ்தல் நடவடிக்கை மாத்திரம் மேற்கொண்டு 07 குழாய்க் கிணறுகளுக்கு பம்பிகள் பொருத்தும் நடவடிக்கை செய்யப்படாமையால் நீர் எடுப்பதற்கு சிக்கலாக இருந்ததனால் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது கைவிடப்பட்டிருந்ததுடன் அதற்காக செலவு செய்யப்பட்டிருந்தது. | குழாய்க்கிணறுகளை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளக்கூடிய நிலைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | உடன்படிக்கை செய்யப்பட்ட காலத்தில் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசகள் |
|---|---|---|---|
| (அ) | கம்பஹா மாவட்ட செலகத்திற்காக 07 மாடிகளைக் கொண்டு ரூபா 3,054,216,427 கிரய மதிப்பீட்டில் ஒரு கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்காக ஒரு தனியார் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் கட்டிடத்தின் நிர்மாண நடவடிக்கைகள் 2021 மார்ச் 01 ஆந் திகதியளவில் முடிவுறத்தப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தும் 2022 மே 31 ஆந் திகதிய அரசாங்க நிருவாக அமைச்சு செயலாளரின் கடிதத்திற்கு இணங்க வேலையை முடிவுறுத்த வேண்டிய திகதியானது அலுவலக கட்டிடத்திற்கு 2022 மே 29 மற்றும் கேட்போர் கூடத்திற்கு 2022 யூலை 18 ஆக குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2023 மே 31 ஆந் திகதி வரையும் வேலையை முடித்து கட்டிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. | கொவிட் தொற்று நோயின் காரணமாக நாட்டில் உருவாகிய பொருளாதார பிரச்சினையானது நிர்மாண நடவடிக்கைகளுக்கு அதிக அளவு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் காணப்படுகின்ற நிலைமைக்காக எதிர்பார்க்கும் காலத்தை நீடித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் தற்பொழுது செயற்திட்டம் இறுதிக் கட்டத்தில் காணப்படுகின்றது. | உடன்படிக்கை செய்த காலத்தில் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | ஜா –எல பிரதேச செயலகம் தற்பொழுது செயற்படும் கட்டிடம் மிகவும் உடைந்த நிலையில் காணப்படுவதனால் புதிய ஒரு கட்டிடத்தினை நிர்மாணித்தல் 2013 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு ரூபா 165.34 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட பணத்திற்கு துரிதமாக நிர்மாணித்து முடிவுறுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தும் காணி தொடர்பாக உருவாகிய சிக்கலின் அடிப்படையில் கட்டிடத்தின் அடித்தளத்தினை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்திற்காக | தற்பொழுது நிர்மாணத்தின் செயல் முன்னேற்றம் 98% ஆன திருப்தியான மட்டத்தில் காணப்படுகின்றது. 2023 ஆம் ஆண்டில் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என தெரிவிக்கிறேன். | உடன்படிக்கை செய்யப்பட்ட காலத்திற்குள் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும |

ரூபா 5,369,779 முற்பணம் செலுத்தியதன் பின்னர் ஒப்பந்தத்தின் வேலை தற்காலிகமாக கைவிடப்பட்டு ஒரு ஆண்டிற்கு அண்மித்த காலத்தின் பின்னர் அந்த நிறுவனத்தின் மூலம் ரூபா 27 மில்லியன் செலவு செய்து அடித்தளப்பகுதியை நிர்மாணித்து ரூபா 145.33 மில்லியன் பெறுமதிக்கு மிகுதி வேலைகள் மற்றுமொரு நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட இச்செயற்திட்டம் 2021 நவம்பர் 18 ஆந் திகதி முடிவுறுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதிவரையும் பூர்த்திசெய்வதற்க முடியவில்லை.

(இ) வத்தளை பிரதேச செயலகத்திற்கு ஐந்து மாடிகளைக் கொண்ட ஒரு கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்கு 2013 ஒக்தோபர் 03 ஆந் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது ரூபா 167.9 மில்லியனான மொத்த கிரய மதிப்பீட்டிற்கு அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன் முதலாவது கட்டமாக பயிலிங் வேலையை மேற்கொண்டு இரண்டாவது கட்டமாக கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. இரண்டாவது கட்டத்திற்காக பெறுகை நடவடிக்கைகளை மேற்கொண்டதன் பின்னர் ஒரு தனியார் கம்பனிக்கு ரூபா 110,999,052 பெறுமதி சேர் வரியற்ற தொகைக்கு 2016 திசெம்பர் 29 ஆந் திகதி ஒப்பந்தம் வழங்கப்பட்டது. இந்த ஒப்பந்தம் 2017 சனவரி 12 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டு 2017 திசெம்பர் 28 ஆந் திகதி முடிவுறுத்தப்பட வேண்டியிருந்த

தற்பொழுது நிர்மாணத்தின் செயல்முன்னேற்றம் 99% ஆன திருப்தியான மட்டத்தில் காணப்படுகின்றது. 2023 ஆம் ஆண்டிற்குள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என தெரிவிக்கிறேன்.

உடன்படிக்கை செய்த காலத்தில் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையும் கட்டிடம் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளக் கூடிய நிலைக்கு நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | மகர பிரதேச செயலகத்தில் பதிவுசெய்த மரண உதவி, கிராமிய அபிவிருத்தி சங்கம், இறுதிச்சடங்கு உதவி, மகளிர் , முதியோர் சங்கம் என்பவற்றிற்காக பிளாஸ்ரிக் கதிரைகள் மற்றும் புடவைகளை வழங்குவதற்காக 2021 பன்முகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 889,283 பெறுமதியான 10*15 அளவிலான 21 கனொபி கூடாரங்கள் கைபிடியுள்ள 274 பிளாஸ்ரிக் கதிரைகள் மீளாய்வாண்டின் இறுதிவரை பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் உரிய அனைத்து பொருட்களையும் முடியுமான அளவு விரைவாக பகிர்ந்தளிப்பதற்க நடவடிக்கை எடுக்கப்படும். | பொதுமக்களுக்கு சேவைகள் கிடைக்கும் வகையில் செயற்திட்டம் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்படுதல் வேண்டும். |

### 3.3. பணம் விடுவிக்கப்பட்டிருந்தும் செயல்முன்னேற்றத்தை அடைந்து கொள்ளாத செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசகள் |
|---|---|---|---|
| (அ) | கடந்த 05 ஆண்டுகளுக்குள் கம்பஹா பிரதேச செயலகம் ரூபா 1,832,000 செலவு செய்து மொரகொடவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சேவை இல்லத்துடனான மகளிர் சிகிச்சை கட்டிடம், கொஸ்ஸின்ன கிழக்கில் நிர்மாணிக்கப்பட்ட சேவை இல்லம் மற்றும் முதுன்கொட வடக்கு சேவை இல்லம் ஆகிய 03 கட்டிடங்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத மட்டத்தில் காணப்படுவதனால் அவற்றிற்காக செலவு செய்யப்பட்ட பணத்திற்கு | பயன்பாட்டிற்க எடுத்துக்கொள்ளக்கூடிய மட்டத்திற்கு வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காக இன்னும் நிதி ஏற்பாடு தேவைப்படுகின்றது. | குறைபாடுகளைத் தேடிப்பார்த்து பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளக்கூ டிய நிலைக்கு மாற்றுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதியளவு பிரதிபலன்கள் கிடைக்கவில்லை. | | |
| (ஆ) | சௌபாக்கிய புடவை கிராமிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் திவுலபிடிய பிரதேச செயலகத்தின் மூலம் அஸ்ஸென்னவத்தையில் நிர்மாணிக்கப்பட்ட புடவை விற்பனை நிலையமானது பிரதேச சபையின் காணியில் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அஸ்ஸென்னவத்த, செக்குவத்த நூல் நிலைய கட்டிடத்தின் மேல்மாடியில் இந்த நிலையத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 2,925,909 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் இக்கட்டிடத்தின் வேலையை முடிவுறுத்துவதற்கு முடியாதிருந்ததனால் 2022 ஆம் ஆண்டில் கிராமங்களுடன் சினேகபூர்வம் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 1,261,981 செலவு செய்து இரண்டாம் மாடியில் வேலைகளை முடிவுறுத்தி மேல் மாடியை நூல் நிலையமாகவும் கீழ் மாடியை விற்பனை நிலையமாகவும் தயார்படுத்தப்பட்டிருந்தும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அந்த நிலைமை அவ்வாறே இருந்தும் விற்பனை நிலையத்தை கீழ் மாடியில் வைத்திருப்பதன் காரணமாக நூல் நிலையத்தினைப் பயன்படுத்துபவர்களுக்கு தெளிவான மனதோடு புத்தகங்களை வாசிப்பதற்கு முடியாத நிலைமை உருவாகியுள்ளது. | செயற்திட்டம் தொடர்பாக சாத்திய வள ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. குருனாகல் - கொழும்பு பிரதான வீதிக்கு அருகாமையில் சனநெரிசலான ஒரு இடத்தில் இக்கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் நூல் நிலையம் மேல்மாடியில் செயற்படுகின்றது. தற்பொழுது நாட்டில் காணப்படும் பொருளாதார சிக்கலின் காரணமாக பல உற்பத்தியாளர்கள் விற்பனை செய்வதற்கு போதியளவு உற்பத்தி மேற்கொள்ளப்படாததனால் தற்பொழுது விற்பனை நிலையம் செயற்படும் நிலையில் இருக்கவில்லை. | விற்பனை நிலையத்தை செயற்படும் நிலைக்கு மாற்றுதல் வேண்டும். |
| (இ) | சௌபாக்கிய உற்பத்திக் கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டில் பியகம பிரதேச செயலகத்தினால் அமுல்ப்படுத்தப்பட்ட | நலன்புரிச் சங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க ஒரு அங்கு நிர்க் குழாய்கள் வழங்கப்பட்டுள்ளன. | உடன்படிக்கை செய்த காலத்தினுள் செயற்திட்டத்தினை பூர்த்திசெய்லவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டத்தின் மூலம் 10 நலன்பெறுனர்களுக்க வழங்கிய 1000 லீற்றர் அளவான 10 நீர்த் தாங்கிகளும் 100 அடி நீளமான 10 ஹோஸ் வைப்புக்களும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. | | |
| (ஈ) | பியகம பிரதேச செயலகத்தில் சௌாக்கிய உற்பத்தி கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டம் - 2021 செயற்திட்டத்தினால் சமய வழிபாட்டுப் பொருள் உற்பத்திக்காக ரூபா 633,245 செலவு செய்து 06 நலன்பெறுனர்களுக்கு வழங்கிய உபகரணங்கள் அவர்களால் பயன்படுத்தப்படாததனால் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துவதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | பொபின் மெளுகினை பெற்றுக்கொள்ள முடியாமையின் அடிப்படையில் மெளுகுதிரி உற்பத்தி செய்யப்படாத போதிலும் திரி உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றது. | உடன்படிக்கை செய்யப்பட்ட காலத்தினுள் செயற்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4. பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| மாவட்ட செயலகத்திற்கு வாகன உதிரிப்பாகங்களை கொள்வனவு செய்யும் இரண்டு சந்தர்ப்பங்களின் போது பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.4.3 (இ) ஒழுங்குவிதிகளுக்கு முரணாக நிறுவனத்தில் பதிவுசெய்த வழங்குனர்கள் இருக்கும் போதும் அப்பட்டியலுக்குப் புறம்பான நபர்களிடமிருந்து விலை மனுக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது. | உரிய கோவையின் 50 கடிதங்களின் மூலம் 2020-02-07 ஆந் திகதி விலை மனுக்கள் கோரப்பட்டிருந்ததுடன் மாவட்ட செயலாளரின் கட்டளை மற்றும் அங்கீகாரத்திற்கு இணங்க உரிய உதிரிப்பாகங்கள் பொருத்தப்பட்டுள்ளன. | பெறுகை வழிகாட்டிக் கோவைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5. சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசகள் |
|---|---|---|---|
| (அ) | மீரிகம மற்றும் கம்பஹா பரதேச செயலகங்களில் இடர்முகாமைத்துவ பிரிவின் 2 உழவு இயந்திரங்கள் மற்றும் பவுசர்களும் திவுலபிடி பிரதேச செயலகத்தின் இடர் முகாமைத்துவ பிரிவில் 9 உழவு இயந்திரங்கள் மற்றும் பவுசர்களும், கடான பிரதேச செயலகத்தின் இடர் முகாமைத்துவ பிரிவில் 3 உழவு இயந்திரங்கள் மற்றும் பவுசர்களும் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக வினைத்திறனான செயற்பாட்டிற்கு பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது. | போதியளவு சாரதிகள் இல்லாமை, மற்றும் ஏனைய பவுசர்கள் நீரை பகிர்ந்தளிப்பதற்கு போதியதாக உள்ளமை | சொத்துக்களை வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | திவுலபிடிய பிரதேச செயலக வளவில் 2020 ஆம் ஆண்டில் ரூபா 1,000,000 நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் நிர்மாணிக்கப்பட்ட நீர்தாங்கிக்காக நீரைப்பெற்றுக்கொள்ளும் நடைமுறை ஸ்தாபிக்கப்பட்டிருக்காததனால் மேற்கூறிய நிர்த் தாங்கியும் 2018 ஆம் ஆண்டில் தோண்டப்பட்ட குழாய்க்கிணறும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாமையால் அவற்றினை நிர்மாணிப்பதற்கும் தோண்டுவதற்கும் செலவு செய்யப்பட்ட பணம் விளைவற்ற செலவாக மாறியிருந்தது. | குழாய்க்கிணறுகளின் நிகழ்கால நிலைமை தொடர்பாக விசாரித்து 2023-03-09 ஆந் திகதி ஒரு கடிதம் நீர் வழங்கல் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | தேவையான நீர் பம்பிகளையும் குழாய் முறைமைகளையும் வழங்கி நீர்த்தாங்கியை பயன்படுத்தக்கூடிய நிலைக்கு மாற்றுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | வெற்றிலை ஏற்றுமதி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் திவுலபிடிய பிரதேச செயலகத்தினால் 45 கூலிகெதர பிரதேசத்தில் ரூபா 2,926,000 செலவு செய்து ஒரு வெற்றிலை களஞ்சியமும் ஒரு விற்பனை நிலையமும் 2021 ஆம் ஆண்டின் போத பிரதேச சபையின் காணியில் நிர்மாணிக்கப்பட்டிருந்தும் அக்கட்டிடம் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாமையால் அதற்காக செலவு செய்யப்பட்ட பணம் விளைவற்ற செலவாக இருந்தது. | கட்டிடத்திற்கு நீர் மற்றும் மின்சாரத்தினைப் பெற்றுக்கொள்வதில் சிக்கல் காணப்பட்டமையும் விற்பனைக்காக போதியளவு அறுவடை இல்லாமையம் கட்டிடத்தினை பயன்படுத்தாமைக்கான காரணமாகும். பயிர்ச் செய்கையை நல்ல நிலைக்கு கொண்டு வந்ததன் பின்னர் எதிர்காலத்தில் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளலாம். | சொத்துக்களை வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்துதல் வேண்டும். |
| (ஈ) | 2022 ஆம் ஆண்டில் திவுலபிடிய பிரதேச செயலகத்தில் சௌபாக்கிய நெசவுக் கிராமங்கள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இதுராகார கிராம உத்தியோகத்தர் பிரிவில் ரூபா 1,924,944 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்டுள்ள நெசவு நிலையம் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. | இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ளதான த ஒரு விற்பனை நிலையம் அல்லாததுடன் அது உற்பத்திச் செயற்பாட்டிற்காக பயன்படுத்துவதற்கான நெசவுத் தொழில் நிலையமாகும். நாட்டில் காணப்படும் பொருளாதார சிக்கலின் காரணமாக தற்பொழுது செயற்படும் நிலையில் இல்லை. | சொத்துக்களை வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்துதல் வேண்டும். |
| (உ) | மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் 14 நிறைவேற்றுத் தர உத்தியோகபூர்வ இல்லங்களும், 14 நிறைவேற்றுத்தரம் அல்லாத உத்தியோகபூர்வ இல்லங்களும் உள்ளதுடன் 14 நிறைவேற்றுத் தர உத்தியோகபூர்வ இல்லங்களில் 9 இல்லங்களும் 14 நிறைவேற்றுத்தரம் அல்லாத உத்தியோகபூர்வ இல்லங்களில் 8 இல்லங்களும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் உரிய உத்தியோகபூர்வ இல்லங்களை திருத்தம் செய்து பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | சொத்துக்களை வினைத்திறனாகவும் ஆக்பூர்வமாகவும் பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | தொம்பே பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் 08 பாடசாலைகள் மூடப்பட்டிருந்ததுடன் அவற்றில் 04 பாடசாலைகள் வினைத்திறனான செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 03 பாடசாலைகள் அமைந்துள்ள காணிகளின் உரிமை அரசாங்கத்திடம் காணப்படுகின்றதா என்பதனை உறுதிப்படுத்துவதற்கான தகவல்கள் இல்லை இரண்டு பாடசாலைகளில் காணப்பட்ட கட்டிடங்களில் ஒரு பகுதி திருத்தம் செய்து பயன்படுத்துப்படுகின்றது. | சொத்துக்களை வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்துதல் வேண்டும். |
| (எ) | அத்தனகல பிரதேச செயலகத்தின் பட்டியல்படுத்தப்பட்ட 03 உத்தியோகபூர்வ இல்லங்களில் ஒரு உத்தியோகபூர்வ இல்லம் நிறைவேற்றுத்தர உத்தியோகபூர்வ இல்லமாக உள்ளதுடன் மற்றைய 02 உத்தியோகபூர்வ இல்லங்கள் நிறைவேற்றுத் தரம் அல்லாத இல்லங்களாகும். இந்த 03 உத்தியோகபூர்வ இல்லங்களின் கிரயம் அல்லது மதிப்பீட்டுப் பெறுமதியைப் பெற்று கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | மதிப்பீடு செய்வதற்கு மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஏ) | பிரதேச செயலகங்களின் மூலம் அல்லது பிரதேச செயலாளரின் அதிகார வரம்பிற்குட்பட்ட சேவா பியச/ உத்தியோகபூர்வ நில செவன் அலுவலகங்களில் அத்தனகல்ல பிரதேச செயலகத்தின் 04 கட்டிடங்களும் தொம்பே பிரதேச செயலகத்தின் 24 கட்டிடங்களும் மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கிரயம் அல்லது மதிப்பீட்டுப் பெறுமதியை கணக்கீடு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். காணிகள் மற்றும் கட்டிடங்களை மதிப்பீடு செய்வதற்கு மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் வேண்டும். |

## 3.6. நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசகள் |
|---|---|---|---|
| (அ) | திவுலபிடிய பிரதேச செயலகத்தினால் 2017/07/19 ஆந் திகதிய கடித்தின் மூலம் இடர் முகாமைத்துவ பிரிவின் 03 உழவு இந்திர பவுஸர்கள் பதுளை மாவட்டத்தின் உமா ஓயா செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக விடுவிக்கப்பட்டிருந்தது. 2018 ஏப்ரல் 05 ஆந் திகதி 3 உழவு இயந்திரங்கள் பவுசர்கள் திருப்பி வழங்கப்பட்டிருந்தும் வெள்ளை இரும்புச் சட்டம் இரு பக்கமும் கடுமையாக அடிப்பட்டு சமிக்ஞை விளக்குகள் அழிவடைந்திருத்தல், உதிரிப்பாகங்கள் காணாமல் போயிருத்தல் போன்ற பாரிய சேதங்கள் ஏற்பட்டிருந்தன. அது சம்பந்தமாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அது சம்பந்தமாக சம்பவக் குறிப்பு புத்தகத்தில் எதவித பதிவும் காட்டப்பட்டிருக்கவில்லை. 2018 ஆம் ஆண்டில் இந்த நட்டம் இடம்பெற்றிருந்தும் நிதிப்பிரமாணத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்து பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பஹா மாவட்ட செயலாளரின் அறிவுறுத்தலின் படி உமா ஓயா செயற்திட்டத்திற்கு பவுசர்கள் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் அந்த வாகனங்களை மீள ஒப்படைக்கும் போது உரியவாகனங்களுக்கு ஏற்பட்டிருந்த குறைபாடுகள் தொடர்பாக மாவட்ட செயலகம் மற்றும் தேசிய இடர் நிவாரண சேவைகள் நிலையத்திற்கு எழுத்து மூலம் தெரியப்படுத்தப்பட்டது. மேலும் 2023-01-03 ஆந் திகதி அது சம்பந்தமாக புதிய ஒரு செலவு மதிப்பீட்டினை தயாரித்து மாவட்ட செயலாளரினால் தெரியப்படுத்தப்பட்டுள்ளது எனவும் அதற்கிணங்க மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது எனவும் தயவாக தெரிவிக்கிறேன். | நட்டத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மினுவாங்கொட பிரதேச செயலகத்தின் கெப் வாகனம் 1999 யூலை மாதம் விபத்திற்கு உள்ளாகியதனால் ஏற்பட்ட நட்டத்திலிருந்து காப்புறுதி நிறுவனத்திடமிருந்து அறவிட முடியாதிருந்த நட்டமாகிய ரூபா 189,360 தொகையினை மேற்கூறிய விபத்து தொடர்பாக | வழக்கு நடவடிக்கைகள் நியாயமற்ற வகையில் தாமதமடைந்துள்ளதனால் சட்டமா அதிபரின் உதவியை பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு | பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக நி.பி 156(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொண்ட தொடக்க அறிக்கையின் சிபாரிசின் பிரகாரம் விபத்தினை மேற்கொண்ட வேனின் சாரதியிடமிருந்து அறவீடு செய்வதற்காக சட்டரீதியான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்தும் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் 24 ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் கடந்திருந்தும் உரிய நட்டத்தை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | மினுவாங்கொடை பிரதேச செயலாளருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | |
| (இ) | 2021 ஒக்தோபர் மாதம் 20 ஆந் திகதி கம்பஹா மாவட்ட மோட்டார் போக்குவரத்து அலுவலகத்தின் சமிக்ஞை கோபுரம் உடைந்து விழுந்ததனால் நிதிப்பிரமாணம் 104(4) இன் கீழ் மேற்கொள்ளப்பட்ட நட்டம் தொடர்பான விசாரணையின் இறுதி அறிக்கைக்கு இணங்க திட்டமிடல் பிரிவு கட்டிடத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 861,938 ஆகும். நிதிப்பிரமாணம் 104(1)(ஆ) இன் பிரகாரம் முறையான விசாரணையை நடாத்துவதற்காக ஒரு குழுவினை நியமித்தல் கம்பஹா மாவட்ட செயலாளரினால் சிபாரிச செய்யப்பட்டிருந்ததுடன் உரிய நடவடிக்கை தாமதமடைந்ததன் காரணமாக இந்த நட்டத்தை அறவீடு செய்வதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நட்டம் செலுத்தப்படவில்லையாயின் சட்டரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டி ஏற்படும் என அறிவித்து லங்கா பெல் நிறுவனத்திற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | நட்டத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | ஒரு மிட்சுபிசி கெப் வாகனம் 2022 ஒக்தொபர் 06 ஆந் திகதி பசியாலை இரத்மலேவத்த மேலதிக மாவட்ட செயலாளர் வீட்டிலிருந்து எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்கு பசியாலைக்கு வந்து மீண்டும் வீட்டுக்கு செல்லும் போது சாரதிக்கு வாகனத்தை கட்டுப்படுத்திக்கொள்ள முடியாது தொலைபேசி வயர் தூணிலும் | தற்பொழுது தொடக்க புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அந்த விசாரணை நடவடிக்கை முடிவடைந்ததன் பின்னர் மேலதிக நடவடிக்கை எடுப்பதற்க எதிர்பார்க்கப்படுகின்றது. | நட்டத்தை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கொங்கிரீட் தூணிலும் மோதி விபத்துக்குள்ளாகியிருந்தது. அந்த விபத்தின் காரணமாக வாகனத்திற்கு ரூபா 9,000,000 நிதி நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் ரூபா 6,710,000 தொகையினை காப்புறுதி நிறவனத்தினால் ஈடுசெய்வதற்கு இணங்கிக் கொண்டதன் பின்னர் ரூபா 2,290,000 தேறிய நிதி நட்டம் ஏற்பட்டிருந்தது. | | |

**3.7 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 சனவரி 20 ஆந் திகதிய 01/2022 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கையின் பிரகாரம் சில ஓய்வூதியங்கள் அல்லது ஓய்வூதியத்துடன் விதவை/ தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியம் கிடைத்தாலும் அவ்வாறான நபருக்கு தகமையாவது ஒரு மாத்திற்கு ரூபா 5,000 படி மாத்திரமாக இருந்த போதிலும் திவுலபிடிய பிரதேச செயலகத்தினால் அவ்வாறான இரண்டு ஓய்வூதியக்காரர்களுக்கு படிகள் இரண்டு தடவைகள் செலுத்தப்பட்டதன் அடிப்படையில் மாதாந்தம் ரூபா 5,000 வீதம் 10 மாதங்களுக்கு ரூபா 100,000 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | மிகையாகச் செலுத்தப்பட்டுள்ள பதணத்தை அறவீடு செய்வதற்காக தரவு முறைமைக்கு உள்ளடக்குவதற்கு குறித்துக்கொள்ளப்பட்டது எனத் தெரிவிக்கிறேன். | மிகையாகச் செலுத்தப்பட்ட பணம் அறவீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 2020 செப்தெம்பர் 18 ஆந் திகதிய 16/2020 ஆம் இலக்க உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு சுற்றறிக்கையின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் ஆகக்குறைந்தது 04 மாதங்களுக்கு ஒரு தடவையேனும் அனைத்து கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களையும் உள்ளடக்கும் வகையில் பிரதேச | 2022 ஆம் ஆண்டில் கொரோனா தொற்றுநோய், எரிபொருள் பிரச்சினை ஆகிய காரணங்களின் அடிப்படையில் இடம்பெற்ற போக்குவரத்து சிக்கலின் அடிப்படையில் அலுவலக பரீட்சிப்பினை முறைப்படியாக நிறைவேற்ற முடியாதிருந்தது. 2023 ஆம் | சுற்றறிக்கை எற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செயலாளர், உதவி பிரதேச செயலாளர் மற்றும் நிருவாக உத்தியோகத்தரினால் பொருத்தமானவாறு பகிர்ந்து ஒதுக்கீடு செய்து பரீட்சிப்பிற்கு உட்படுத்த வேண்டிய பேதிலும் அத்தனகல பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தைச் சார்ந்த 151 கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களில் 111 அலுவலகங்களும் நீர்கொழும்பு பிரதேச செயலக பிரதேசத்தைச் சார்ந்த 39 கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களில் 37 அலுவலகங்களும், தொம்பே பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தைச் சார்ந்த 133 கிராம உத்தியோகத்தர், அலுவலகங்களில் 5 அலுவகங்களும், மினுவாங்கொட பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தைச் சார்ந்த 121 கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களில் 42 அலுவலகங்களும், வத்தளை பிரதேச செயலக அதிகரப் பிரதேசத்தைச் சார்ந்த 46 கிராம உத்தியொகத்தர் அலுவலகங்களில் 18 அலுவலகங்களும், திவுலபிடிய பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தைச் சார்ந்த 123 கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களில் 121 அலுவலகங்களும் 2022 ஆம் ஆண்டின் போது ஒரு தடவையேனும் பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஆண்டில் அலுவலக பரீட்சிப்பினை முறைப்படியாக மேற்கொள்வதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | |
| (இ) | கம்பஹா மாவட்டத்தின் 13 பிரதேச செயலகங்களில் வசிக்கும் குடும்பங்களுக்கு மத்தியில் அதிகாரமற்ற வீடுகளில் வசிக்கும் 52,946 குடும்பங்களும், தற்காலிகவீடுகளில் வசிக்கும் 24,526 குடும்பங்களும், மலசலகூட வசதிகள் இல்லாத 46,818 குடும்பங்களும், பொது நீர்க் குழாயினை பயன்படுத்தும் 34,634 குடும்பங்களும், மின்சாரம் | பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற பொருளாதாரம், சமூகம், கலாச்சாரம் முதலிய அனைத்து துறைகளிலும் காணப்படுகின்ற சிக்கல்களை இனங்கண்டு குறைபாடுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச | ஆகக் குறைந்த வசதிகள் இல்லாது வசிக்கின்ற நபர்களை மேம்படுத்துவதற்கு விசேட கவனம் செலுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இல்லாத 2,432 வீடுகளும், வீதி வசதிகள் இல்லாத 1,719 வீடுகளுமாக வாழ்வதற்குத் தேவையான ஆகக் குறைந்த வசதிகள் இல்லாது வாழுகின்ற நபர்கள் தொடர்பாக அரசாங்கத்தின் கவனத்திற்கு எடுத்துச்சென்று அக்குடும்பங்களுக்கு வாழ்வதற்கான அடிப்படை வசதிகளை வழங்கும் தேவைப்பாட்டினை அவதானிக்கிறேன். | செயலாளருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | |
| (ஈ) | நீர்கொழும்பு பிரதேச செயலகத்தில் ஓய்வூதிய இலக்கம் 01-756370 மற்றும் 21-75155 இன் கீழ் சிவில் மற்றும் விதவைகள் ஓய்வூதியத்தினைப் பெற்றுக்கொண்டிருக்கும் ஓய்வூதியக்காரர் 2020 ஒக்தோபர் 22 ஆந் திகதி மரணமடைந்திருந்தும் முறைப்படியாக தரவு முறைமையிலிருந்து நீக்கப்படாமையின் காரணமாக மரணமடைந்த திகதியின் பின்னர் சிவில் ஓய்வூதியமாக ரூபா 254,468 தொகையும் விதவைகள் ஓய்வூதியமாக ரூபா 133,632 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. இந்த ஓய்வூதியக்காரர் மரணமடைந்தது பற்றி கிராம உத்தியோகத்தரினால் தெரியப்படுத்தப்பட்டிருந்தும் ஓய்வூதியத்தினை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் முறையற்ற வகையில் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 388,100 பணத்தை அறவீடு செய்வதற்கு அல்லது மேற்கூறிய பிழையான கொடுப்பனவை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்கள் சம்பந்தமதமாக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மிகையாக செலுத்தப்பட்ட பணத்தை தவணை ரீதியாக வாரிசுக்காரரினால் செலுத்துதல் இடம்பெறுவதுடன் இன்னும் அறவிட வேண்டிய பணம் ரூபா 75,000 ஆகும். | * ஓய்வுதியம் மிகையாக செலுத்துவதனை தவிர்ப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாட்டினை வலுப்படுத்துதல் வேண்டும்.<br>* பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக நி.பி 156(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | அரசாங்க சேவையில் சம்பளத்தை திருத்தம் செய்து 2006 ஏப்ரல் 25 | கோவைகளின் ஓய்வூதியத்தினை | சுற்றிக்கை ஏற்பாடுகளுக்கு |

| | | | |
|---|---|---|---|
| | ஆந் திகதிய 6/2006 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை மற்றும் 2007-08-24 ஆந் திகதிய 6/2006 (IV) ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை என்பவற்றினை அமுல்ப்படுத்துவதற்கு முன்னர் ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர்களின் ஓய்வூதிய திருத்தத்தினை 2015 யூலை 10 ஆந் திகதியிலிருந்து அமுல்ப்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்து 7 ஆண்டுகள் கடந்திருந்தும் 233 ஓய்வூதிய கோவைகளின் சம்பளங்கள் திருத்தப்பட்டிருக்கவில்லை. | திருத்துவதற்காக போதியளவு தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை. | இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | கம்பஹா பிரதேச செயலகத்தில் ஓய்வூதியத்தினைப் பெற்றுக்கொண்ட ஓய்வூதியக்காரரின் மனைவியின் ஓய்வூதியம் மற்றும் அவருக்கு தகமையுள்ள தபுதாரர் அனைாதைகள் ஓய்வூதியமானது அந்த ஓய்வூதியக்காரர் மரணமடைந்த பின்னர் 05 ஆண்டுகள் காலத்திற்கு ரூபா 2,696,304 செலுத்தப்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டது. 09/2014 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கையின் மூலம் உயிர் வாழும் சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்படாது ஓய்வூதியக்காரரின் ஓய்வூதியத்தினை தற்காலிகமாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையின் அடிப்படையில் ஓய்வூதியக்காரரினால் உயிர்வாழும் சான்றிதழ் வழங்கப்படாதிருந்தும் 2013 இலிருந்து 2016 வரையான ஆண்டுகளின் போது ஓய்வூதியம் முறையற்ற வகையில் செலுத்தப்பட்ருந்தது. | மிகையாக செலுத்துதல் இனங்காணப்பட்டு உடனடியாக கொடுப்பனவு நிறுத்தப்பட்டு ரூபா 250,000 அறவீடு செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இந்நிலைமையை தவிர்ப்பதற்கு தேவையான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | * ஓய்வூதியம் மிகையாக செலுத்துதலினை தவிர்ப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாட்டினை வலுப்படுத்துதல் வேண்டும்.<br>* பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக நி.பி 156(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசகள் |
|---|---|---|
| 11 நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்கள் இனங்காணப்பட்டிருந்ததுடன் அதற்காக 20 இலக்குகள் இனங்காணப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் இறுதி வரை அந்த இலக்குகளை நிறைவேற்றும் செயல்முன்னேற்றம் எதிர்பார்த்த 12 இலக்குகளுக்காக 0 சதவீதத்திலிருந்து 49 சதவீதத்திற்கும், எதிர்பார்த்த 03 இலக்குகளுக்காக 50 சதவீதத்திலிருந்து 74 சதவீதத்திற்கும் 05 இலக்குகளுக்காக 75 சதவீதத்திலிருந்து 100 சதவீதத்திற்கும் இடைப்பட்ட அளவுகளில் காணப்பட்டன. | 2023 ஆம் ஆண்டுகளிலிருந்து உரிய குறிக்கோள்களை நிறைவேற்றும் செயல்முன்னேற்றத்தை உயர்ந்த மட்டத்தில் பேணுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | உரிய இலக்குகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 5. மனித வளங்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் மாவட்ட செயலகத்திற்கான அங்கீகரித்த ஊழியர் 3,454 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 3,176 ஆக இருந்ததனால் 279 வெற்றிடங்களும் 1 மீகையும் காணப்பட்டன. | ஒவ்வொரு மாதமும் 15 ஆந் திகதி மற்றும் 30 ஆந் திகதிகளில் மாவட்டத்தில் காணப்பட்ட வெற்றிடங்கள் அமைச்சின் உத்தியோகபூர்வ இணையதளத்தின் மூலம் நாளதுவரையாக்கப்படும். | உரிய அத்தியாவசிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கம்பஹா மாவட்ட செயலகத்தின் அங்கீகரித்த பதவியணியினருக்கு மேலதிகமாக 13 பிரதேச செயலகங்களுக்காக பல்நோக்கு அபிவிருத்தி செயலாற்றல் படையணியின் 2763 ஊழியர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்த போதிலும் அவர்களில் 950 ஊழியர்கள் நீங்கிக் கொண்டிருந்ததனால் | அரசாங்க கொள்கையின் அடிப்படையில் உரிய உழியர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந் ததுடன் உரிய சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் கொடுப்பனவு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. | பல்நோக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களை வினைத்திறனான செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தற்பொழுது சேவையில் ஈடுபட்டள்ள 1813 ஊழியர்கள் வினைத்திறனான செயற்பாடுகளுக்கு ஈடுபடுத்தப்படாது 2022 ஆம் ஆண்டில் சம்பளமாக ரூபா 526,938,510 செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (இ) | 2001 ஆகஸ்ட் 22 ஆந் திகதிய 18/2001 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சற்றறிக்கையின் பிரகாரம் 05 ஆண்டுகள் சேவைக்காலத்தினை மிகைத்த உத்தியோகத்தர்கள் இடமாற்றத்திற்கு உட்படுத்தவேண்டியிருந்த போதிலும் மாவட்ட செயலகத்தின் மற்றும் 13 பிரதேச செயலகங்களில் அலுவலகப்படுத்தப்பட்ட 108 அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் 117 முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்களும் 791 வெளிக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் 103 வெளிக்கள ரீதியான கிராம உத்தியோகத்தர்களும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சேவைக் காலத்தில் ஒரே சேவை நிலையத்தில் சேவையாற்றியிருந்தனர். | உரிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக வருடாந்தம் உரிய படிவத்தின் மூலம் அரசாங்க நிருவாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு தெரியப்படுத்தப்பட்டது. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |